குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
எஸ்.டி.சி.51/2021

2021-ம் ஆண்டு நவம்பர் 26 வெள்ளிக்கிழமை புகார்தாரர் தரப்பு சாட்சியாகி 1-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.உமா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. வெள்ளைசாமி | வயது | : 74 |
| த/பெ | : அழகியண்ணகவுண்டர் | தொழில் | : விவசாயம் |
| ஊர் | : கென்னடி நகர் | சமயம் | : இந்து |
| வட்டம் | : சேலம் | ஜாதி | : கொங்கு வெள்ளாளர் |
| மாவட்டம் | : சேலம் | | |

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் சேலத்தில் குடியிருக்கிறேன். ஒட்டஞ்சத்திரத்தில் உள்ள என்னுடைய விவசாய நிலங்களை பார்க்க மாதத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை செல்வேன். எனக்கு ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி ஓமலூர் கிளை மற்றும் யூனியன் வங்கி 5-ரோடு சேலம் ஆகியவற்றில் வங்கி கணக்குகள் உள்ளன. ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியில் எனக்கு ஒருவருடமாக வங்கி கணக்கு உள்ளது. யூனியன் வங்கியில் எனக்கு சுமார் 15 வருடங்களுக்கு மேலாக எனக்கு வங்கி கணக்கு உள்ளது. நான் 1996-ம் வருடத்தில் இருந்து வருமான வாி செலுத்துகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். வருமான வாி கணக்கில் விவசாய வருமானத்தை காட்டியுள்ளேன். அவ்வாறு வருமான வாி கணக்கை எனது இரண்டு வங்கிகளிலும் காட்டுகிறேன். வங்கியில் வரவு செலவு செய்வது குறித்து எனக்கு தெரியும். நான் 6-ம் வகுப்பு படித்துள்ளேன். ஓமலூர் நீதிமன்றத்தில் எனக்கு மொத்தம் மூன்று வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவை சசிக்குமார், அன்புசெல்வன், கீதா ஆகியோர் மீது வழக்கு தொடர்ந்துள்ளேன். இவ்வழக்கின் எதிரியை சுமார் 10 வருடங்களுக்கு மேலாக எனக்கு தெரியும். எதிரியின் வீட்டிற்கு நான் சென்றுள்ளேன். அவரது வீட்டு கதவு எண் எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரி காய்கறி வியபாரம் செய்கிறார். எதிரிக்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்கு தெரியாது. எதிரி என்னிடம் கடன் பெற்றபோது சாட்சிகள் பாலகிருஷ்ணன் மற்றும் எனது மருமகன் இருந்தார். எதிரி என்னிடம் வட்டியை குறைத்துக் கொள்ளுமாறு கேட்டாரா என்றால் ஒருமுறை கேட்டார். அலைபேசியில் கேட்டார். மேற்படி சங்கதியை எனது புகார் மற்றும் பிரமாண பத்திரிக்கையில் கூறவில்லை. எங்கள் வீட்டில் நான் மற்றும் எனது மனைவி உள்ளோம். எனது மனைவி வீட்டில் தான் உள்ளார். எனது மாத வருமானம் ஒரு லட்சத்திற்கு மேல் இருக்கும். எனக்கும், எனது சகோதரருக்கும் சேர்ந்து மொத்தம் 27 ஏக்கர் விவசாயம் நிலம் உள்ளது. பாகப்பிரிவினை செய்யவில்லை, கூட்டுக்குடும்பமாக விவசாயம் செய்கிறோம். எனக்கு 3 மகள்கள் உள்ளனர். சுமார் 26 வருடங்களுக்கு முன்னர் எனது மகள் சாந்திக்கும், மருமகன் ரவிசந்திரனுக்கும் திருமணம் நடைபெற்றது. இவ்வழக்கு தொடர்பான எனக்கு தெரிந்த எல்லா பொருண்மைகளையும் வழக்கில் நான் கூறியுள்ளேன்.

(எதிரி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/ எம்.ஏ. சுவேதாரண்யன்,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.